# கல்வி அமைச்சு

## நாடு முழுவதிலும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும். இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தர அதிபர் பதவிகளை நிரப்புதல் - 2023

இத்துடன் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பாட சாலைகளின் அதிபர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு உத்தரவின்படி இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் தகைமைப்பெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்**

i. இலங்கை அதிபர் சேவையின் 1 ஆம் தர உத்தியோகராக இருத்தல்

**குறிப்பு 1** : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெறுவதற்கு சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளின் படி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும்., இதுவரையில் அந்த உயர்வு கிடைக்காத சேவையின் 11 ஆம் தர உத்தியோகத்தர்களுக்கு இந்த வெற்றிடங்கள் தொடர்பாக விண்ணப்பிக்கலாம்.
(நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம் உரிய வெற்றிடங்களுக்காக நியமிக்கப்படுவார்கள்.)

**குறிப்பு 2 :** விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் 1 ஆம் தரத்திற்கு உயர்வு பெறுவதற்கு தகைமைப்பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன், ஏனைய உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அரசாங்க சேவைக் குழுவினால், தேசிய பாடசாலை அதிபர்களாக நியமிப்பதற்கு தகுதியற்றவர்கள என அறிவக்கப்பட்ட அலுவலர்களுக்கு விண்ணபிக்க முடியாது.

iii. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி தினத்தன்று 58 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். (தற்போது ஏதேனும் ஒரு தேசிய பாடசாலையில் அதிபர் பதவியின் கடமைகளை பார்ப்பதற்கு/பணிகளை நிறைவேற்றுவதற்கு/ கடமைகளை தழுவுவதற்கு முறையாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்த அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு இந்த வயதெல்லை உரித்தாகாது)

**02. நிபந்தனைகள்**

**i.** இம்முறை வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது உரிய அதிபர் பதவிக்காக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அப்பதவியில் குறைந்தபட்சம் 3 வருடமாவது சேவை புரிய வேண்டும்.

**ii.** விருப்பு தெரிவிக்கப்பட்ட எந்தவொரு பாடசாலையிலும் அதிபர் பதவிக்கு நியமனம் பெற்றால் ஏற்றுக் கொள்ள கூடிய காரணங்களின்றி அப்பதவியின் கடமை பொறுப்பேற்றலை நிராகரிக்க முடியாது

03. **விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்தும் முறை**

i. விண்ணப்பதாரர்களினால் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கிணைவாக A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் மாத்திரம் பின்வரும் முகவரிக்கு 2023.07.31 தினத்தன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய பாடசாலை அதிபர் பதவி - இ.அ. சே I"** என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் "உதவிச் செயலாளர், கல்விச் சேவை தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

ii. உங்களால் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட $2x2^1/_2$ அங்குல வண்ண புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டப்பட்டு அனுப்ப வேண்டும்.

**04. முறைமை**

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள் என்பதுடன், வெற்றிடங்கள் நிலவும் பாடசாலை எண்ணிக்கைக்கமைய உத்தியோகத்தர்களை அதிபர்களாக நியமிப்பதற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.
எவ்வாறாயினும் விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்தும்போது விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப பாடசாலைகளை பெயரிடப்பட முடியும் என்பதுடன், அதிபர் பதவிக்கு நியமிக்கப்படும் போது அந்த விருப்பையும் கருத்திற் கொள்ளப்படும்.

அதன் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இத்துடன் காட்டப்பட்டுள்ள புள்ளி நடைமுறையின் படி, அக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தெரிவுச் சபையினால் வழங்கப்படும் புள்ளிகள், விண்ணப்பதாரரின் விருப்பு, விண்ணப்பதாரர் தொடர்பில் நிலவிய/நிலவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் கவனிக்கப்பட வேண்டிய இதர விடயங்களையும் கவனத்திற்கொண்டு மற்றும் கல்விச் செயலாளரினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அதிபர் பதவிகள் வழங்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் கட்டளைப்படி,

**எம்.என். ரணசிங்க**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

2023.07. 13